# நாரணன் நாற்பது

அலைகின்ற ஆழிதனில் பள்ளிகொண்ட மாலே
சிலையாகத் திருத்தலங்களில் உறைகின்றாயே
அலைகின்ற என்மனதையுன் வசமாக்கியே என்றும்
1. நிலையாக உன் தனையே நினைக்கச்செய்வாயே!

வாய் உன் தன் நாமங்களையே சொன்னாலும்
பேய்மனம் எங்கெங்கோ அலைந்து திரிந்தாலும்
சேய் என் தன் சேமத்தைக் கருத்திற்கொண்டு – என்தனை
2. தாய்போல் காத்துஎன்றும் அருள்புரிவாயே!

அருளுபவன் நீயன்றி வேறுஇல்லை என்றானவனே
உருளும் சகடமாய்வந்த அரக்கனை மாய்த்தவனே
மருளும் விழியாள் வைதேகி கரம்பற்றியவனே – என்மன
3. இருளும் நீங்கி நீயே பரனென உணரச்செய்தாயே!

செய்தனை மாயங்கள் பலபல ஆயர்பாடிவந்து
கொய்தனை இரணியன் உயிரை அரியாகவந்து
எய்தனைஅம்புகளை இராமனாய்அரக்கர்மீது –கண்ணனாய்
4. பெய்தனை அன்பைப் பரிவுடன் பாண்டவர்மீது !

பாண்டவர் துயர்துடைக்கப் போர்புரிந்தாய்
பாண்டங்கள் செய்பவனுக்கும் காட்சிதந்தாய்
தாண்டக் கடல்மீது கல்லால் அணைசேர்த்தாய் ––பாலகன்
5. வேண்ட தூண்பிளந்து அரியாக நீயும் தோன்றினாய் !

நாய்தனை நீராட்டி வீட்டினுள் வைத்தாலும்
வால்தனைக் குழைத்து வீதிக்குச் செல்லுமாப் போலிந்த
சேய்தனை நீ சீராட்டிக் காத்திட நினைத்தாலும் – நின்தன்
6. தாள்தனை மனம்நினையாது எங்கோ திரிகின்றதே !

திரிந்தாய் கானகம் முழுவதும் தந்தைசொல் காக்க
பிளந்தாய் இரணியன் மார்பதனை இரண்டுகூறாக
இரந்தாய் மண்கேட்டு மாவலிமுன் குறளாக – பிள்ளையாய்ப்
7. பிறந்தாய் தேவகிவயிற்றில் கஞ்சனை மாய்ப்பதற்காக !

மாய்ப்பதற்காகப் பிறந்தநீயும் வேற்றிடம் சேர்ந்தாய்
காய்தனைச் சாய்ப்பதற்குக் கன்றுதனை உயர வீசினாய்
தாய்போல் வந்தவளை முலை உறிஞ்சிக்கொன்றாய்– அன்னைக்கு
8. வாய்தனில் ஏழுவுலகையும் காட்டியே நீயும் மகிழ்ந்தாய் !

மகிழ்ந்தாள் உன்செயல் கண்டு யசோதையுமே
இகழ்ந்தான் உன்னையாரென்று உணரா இரணியனுமே
நெகிழ்ந்தான் உன் நட்பின் உயர்வால் குசேலனுமே – போர்தனில்
9. புகழ்ந்தான் உன் வீரமது நேரில்கண்ட பார்த்தனுமே !

பார்த்தனுக்கு சாரதியாகத் தேர்மீது அமர்ந்தாய்
பார்புகழும் கீதைதனை அவனுக்கு அன்று உரைத்தாய்
வார்குழலாள் ருக்மணியின் கரம்பிடித்தாய் – ஆயர்க்கு
10. கார்வாண்ணனாய் இருந்து பலநன்மைகள் செய்தாய் !

